# யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியிலுள்ள மரபுரிமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான தந்திரோபாயம்

A.Sivachchelvy

BA(Hons) ,MA(Archaeology), Mphil .student , University of Peradeniya

ஆய்வுச்சுருக்கம்

"யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியிலுள்ள மரபுரிமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான தந்திரோபாயம்" எனும் இவ் ஆய்வானது மாநகர சபைக்குட்பட்ட மரபுரிமைச் சொத்துக்களை அடையாளப்படுத்துதல், அவை அழிவதற்கான காரணங்களைக் கண்டறிதல், அவற்றை பராமரிப்பதில் உள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள முகாமைத்துவ முறையினை மதிப்பீடு செய்தல், அவற்றைப் பாதுகாத்து முகாமைத்தவம் செய்வதற்கான தந்திரோபாயங்களை இனங்கானலை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும் யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியின் கலை, கலாச்சார, பண்பாட்டு வரலாற்று விடயங்களை பேணுவதற்கு மரபுரிமைச் சொத்துக்களின் நிலைத்திருப்பு என்பது அவசியமானது. இவ் அவசியத்தை வெளிக்கொணர்வதற்காக மரபுரிமைச் சொத்துக்களை கவனத்தில் கொள்வதும், பாதுகாப்பதும் இவ் ஆய்வின் முக்கியத்துவமாகும். மரபுரிமைச் சொத்துக்களின் பரம்பல், மரபுரிமைச் சொத்துக்களின் முக்கியத்துவம், மரபுரிமைச் சொத்துக்கள் அழிவடைந்து வருவதற்கான காரணங்கள், முகாமைத்துவ நடவடிக்கைகள், சட்டங்கள் தொடர்பான தரவுகள் ஆய்வுக்கள பகுதியினூடாக நடந்து செல்லல், நேரடி அவதானம், கள ஆய்வு ஆகிய முறைகளினூடாக பெறப்பட்ட தரவுகளையும் மரபுரிமைச் சொத்துக்களின் வரலாறு, முக்கியத்துவம் , நிறுவன நடவடிக்கைகள் மற்றும் சட்டங்கள் போன்ற தரவுகளை மக்களுடனும் உத்தியோகத்தர்களிடமும் நேர்கானல்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளையும் ஒழுங்கமைத்து இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் 15மு மான மரபுரிமைச் சொத்துக்கள் கவனிப்பாரற்று காணப்படுகின்ற நிலையிலிருப்பதோடு தமிழினத்தின் பாரம்பரிய அடையாளத்தை வெளிப்படுத்தும் மரபுரிமைச் சொத்துக்கள் அழிவடைந்து வரும் நிலை காணப்படுகிறுது. இதற்கு நீண்டகாலமாக இடம்பெற்ற யுத்தம், காலநிலை, நிறுவன கட்டமைப்பின் வினைத்திறனின்மை, கட்டுப்பாடற்ற அபிவிருத்தி, ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களே உள்ளதனை அவதானிக்க முடிந்தது. ஒட்டுமொத்த ஆய்வுப் பெறுபேறானது குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள மரபுரிமைச் சொத்துக்களின் மீதான சாதகமான விளைவுகளை தோற்றுவிப்பதனூடாக இனத்தின் அடையாளம் பாதுகாக்கப்பட்டு இனத்தின் எதிர்கால நிலைத்திருப்பிற்கு ஏற்ப மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான தீர்வுகளை இனங்காணப்படவேண்டியது இன்றியமையாததாகக் காணப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:-** மரபுரிமை, முகாமைத்துவம், நிறுவனக்கட்டமைப்பு, தமிழ், அபிவிருத்தி


## அறிமுகம்


இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மரபுரிமைச் சொத்துக்களை கணிசமானதாக கொண்டு காணப்படுகின்ற யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பகுதி ஆய்வுப் பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மரபுரிமைச்சொத்துக்கள் தொடர்ச்சியாக அழிவடைகின்றது என்பதுடன் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் 1956 இல் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களத்திட்டமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இன முரண்பாடுகளும் 30 வருட கால யுத்தத்தினை தோற்றிவித்தது. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மரபுரிமை சொத்துக்கள் தொடர்பான ஆவணமாக்கல் மற்றும் ஆய்வுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை. இவை யாழ்ப்பாண நகர மரபுரிமை சின்னங்களின் அழிவுக்கு காரணமாகின. அத்துடன் நகரங்கள் திட்டமிடப்பட்டு அமைக்கப்படும் போது அது தொடர்பான மரபுரிமைகளை கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக யாழ்ப்பாண நகரில் யுத்தத்திற்கு பின்னரான துரிதமான அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுகின்ற சூழலில் அப்பிரதேசத்திலுள்ள மரபுரிமைச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய வழிமுறைகள் உருவாக்கப்படவேண்டும். குறித்த மரபுரிமைச்சொத்துக்களோடு தொடர்புபட்ட கலை, கலாச்சார பண்பாட்டு விடயங்களும் அழிக்கப்படுவதனால் குறித்த இன சமுதாயத்தின் அல்லது இனக்குடும்பத்தின் வரலாறு மறைக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு கடத்தப்படாமல் தடுக்கப்படுகின்றது. அதே நேரம் இலங்கையில் பல நகரங்கள் காணப்பட்டாலும் சிறுபாண்மை இன மக்களான பூர்வீக தமிழ் மக்கள் செறிந்து வாழும் நகரமாகவே யாழ்ப்பாண நகரம் காணப்படுகின்றது. இங்கு யாழ்ப்பாண மக்கள் வட இலங்கையின் பூர்வீக குடிகளாக காணப்படுவதற்கான ஆதாரங்களாக இவ் வரலாற்று மரபுரிமை சின்னங்களே காணப்படுவதனால் அவை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

## ஆய்வுப்பிரதேசம்

இலங்கையின் வடமாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தின் (1025மஅ$^2$) (இடவிளக்கப்படம் -1)முக்கிய நிர்வாக மையப்பகுதியிலுள்ள யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசம் முழுவதும் ஆய்வுப்பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது(இடவிளக்கப்படம்-2). இவ் மாநகரசபைப் பகுதியானது 20.20மஅ$^2$ நிலப்பரப்பினையும், 5அ(16கவ) தரைஉயரத்தினையும், வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் அதிகளவு மழைவீழ்ச்சியையும்

பெறுகின்றது. இங்கு சராசரி வெப்பநிலையாக 28உº ஆகவும், 1230அஅ வருடாந்த மழைவீழ்ச்சியாகவும் காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேச நகர சனத்தொகை அடர்த்தியானது யாழ்ப்பாண நகர பிரதேசத்தில் ஒரு சதுர மஅ இற்குள் 2986 ஆகவும், நல்லூர் பிரதேசத்தில் ஒரு சதுர மஅ இற்குள் 1791 ஆகவும் காணப்படுகின்றது(துயககயெ ஆரநைஉியட உழரஉைடை 2018).




இடவிளக்கப்படம் -1(Jaffna District)

இடவிளக்கப்படம் -2(Jaffna mc area)

Source: Jaffna Urban Development Authority

**மரபுரிமை(ர்நசவையபந) என்றால் என்ன?**


மரபுரிமை என்பது முன்னைய சந்ததிகளிலிருந்து கொண்டுவரப்படுவதாகும். இது பாரம்பரியம் அல்லது முன்னோர்களால் வைத்திருக்கப்பட்ட உருவமற்ற சொத்து அல்லது கலை அல்லது சம்பிரதாயத்தால் கொண்டுவரப்படும் நடைமுறைகள், கட்டடங்கள், சமூகம், மற்றும் கலாசாரம் போன்றவற்றிற்கு முக்கியமாக கருதப்படும் வரலாறு, நம்பிக்கைகள் போன்றவற்றை குறிக்கும். இதனால் மரபுரிமை என்பது வரலாற்றுச் சூழலின் ஒரு உள்ளீட்டு அங்கமாக கொள்ளப்படும். ஆனால், இதனை ஒரு விடயமாக மட்டும் வரைவிலக்கணப்படுத்த முடியாது. இது பல்வேறு அம்சங்களின் தொகுப்பாகும். பண்பு, அடையாளம், கலாசாரவேறுபாடு என்பன காலந்தோறும் கட்டியெழுப்பப்படும். இவற்றின் கலவை ஒரு இடத்தின் மரபுரிமையை உருவாக்க பயன்படும்.

**யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியிலுள்ள மரபுரிமைச் சின்னங்கள்**

பல்லினப்பண்பாடு கொண்ட யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை இனமாக தமிழரும், இந்து மதமும் காணப்பட்டாலும் பண்டு தொட்டு பல இனங்கள், பல மதங்கள் பல நாட்டுப் பண்பாடுகள் தொடர்பு கொண்டு இப்பிராந்திய பண்பாடு வளர்ந்ததற்கான மரபுரிமைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் யாழ்ப்பாணக் கோட்டை, பழைய கச்சேரி, பழைய பூங்கா, மணிக்கூட்டுக்கோபுரம், யமுனாஏரி, சென்ஸ்ஜோன்மெதடிஸ் தேவாலயம், மாட்டீன் செமினெறி, சென்ஸ்ஜேம்ஸ் தேவாலயம், ஜிம்மா மஜித் பள்ளிவாசல், வண்ணார்பண்னை சிவன் கோயில், முனீஸ்வரர் ஆலயம், கில்னர் சுவர், யாழ்பொதுநூலகம், மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு கல்தோரணவாசல், ஒல்லாந்தர் மிசனரி, சங்கிலியன் சிலை, நல்லூர் கந்தசாமி கோயில், ஆறுமுகநாவலர் வீடு, பாரம்பரிய வீடுகள் என்பவற்றை யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச்சின்னங்களாகக் குறிப்பிடலாம்.

**இன்றைய நிலை**

மாநகரசபைக்குட்பட்டுள்ள மரபுரிமைச் சின்னங்களின் இன்றைய நிலை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதனை விவரிப்பதற்கு விபரணபுள்ளிவிபரவியல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஆய்விற்குட்படுத்தப்பட்ட மரபுரிமைச் சின்னங்களில் 30மூ மரபுரிமைச் சொத்துக்களின் கட்டமைப்பு முழுமையாக மாற்றப்பட்டுள்ள நிலையிலும் 40மூ பகுதியாக மாற்றப்பட்ட நிலையிலும் 15மூ மாற்றமில்லாத நிலையிலும் 15மூ சிதைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றது.




Source: Field survey-2019

மற்றும் மாநகரசபைப் பகுதியிலுள்ள மரபுரிமைச் சொத்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் எனும் போது கட்டுப்பாடற்ற அபிவிருத்தியும் ஆக்கிரமிப்பும் இதனுள் வீதி அகலிப்பு, கட்டுமான விருத்தி, காணிவிஸ்தீரணம் அடுத்து பொதுமக்களின் விழிப்புணர்வு இன்மையும் காரணமாக உள்ளது. பொதுமக்கள் பொது நலனை கருத்திற் கொள்ளாது மேற்படி செயல்களை செய்கின்றனர். நில அகழ்வு, உடைத்தல், எரித்தல், பயிரிடுதல், குப்பைகொட்டுதல், எல்லைகள் போடுதல், திருடுதல், கிறுக்குதல், பெயரிடுதல் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. மற்றும் சுற்றுச்சூழல் கவனிப்பாரற்றே காணப்படுகிறது. தாவரங்கள், சிறுபற்றைகளை கொண்டதாகவும், மதுபான போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சிதைவடைந்த இலைகுழைகளை அருகில் கொண்டதாகவும் காணப்படுகிறது. இதனுடன் இயற்கைக் காரணிகளின் தாக்கம் 100மூ மானதாக காணப்படுகின்றது. யாழ் குடாநாடானது தீபகற்ப பகுதியாக அமைந்திருப்பதனால் இங்குள்ள மரபுரிமைச் சொத்துக்களுக்கு நேரடி கடல்காற்றுக்கள் தாக்கத்தை செலுத்துகின்றன. அத்துடன் யாழ் மாநகரசபைப் பகுதியானது 5அ(கவ) தரை உயரத்தை கொண்டுள்ளமையால் கடல்நீர் உட்புகக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது. இவை மாத்திரமன்றி வெள்ளப்பெருக்கு, சூறாவளி, கடல்கொந்தளிப்பு, சுனாமி போன்றனவும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆய்வுப்பிரதேசமானது காலங்களுக்கு ஏற்பட்ட மாறுபட்ட வெப்பநிலை 25உ$^{o}$-32உ$^{o}$ வரை கொண்டிருப்பதால் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. மற்றும் கறையான், பங்கஸ், பாசி படர்தல் போன்றன நுண்ணுயிர்களின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதனை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட விடயங்கள் வரலாற்று மரபுரிமைச் சின்னங்களின் தற்போதைய நிலையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஞறுழுவு பகுப்பாய்வு மூலம் பின்வரும் சவால்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**1. பலம்**

- அதிக வரலாற்று மரபுரிமைச் சின்னங்களைக் கொண்டு காணப்படுகின்றமை.
- உள்நாட்டுப் போர் முடிவுற்றமை.
- இயற்கை அனர்த்தப் பாதிப்பு குறைவான பிரதேசமாகக் காணப்படுகின்றது.
- சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்து வருகின்றமை.
- வருடத்தில் அதிக வறட்சியுடைய மாதங்களை கொண்டிராத காலநிலை.

**2. பலவீனம்**

- வரலாற்று மரபுரிமைச் சின்னங்கள் அழிவடைந்து இன்னும் புனரமைக்கப்படாது காணப்படுகின்றமை.
- வரலாற்று மரபுரிமைச் சின்னங்களைப் பராமரிப்பதற்கான முகாமைத்துவ மற்றும் ஆளணி பற்றாக்குறை.
- ஒழுங்குமுறையற்ற குடியேற்றம் மற்றும் சட்டபூர்வமற்ற காணிஅபகரிப்புக்கள்.
- மக்கள் மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய விழிப்புணர்வின்றி காணப்படுகின்றனர்.
- தொல்லியல் மரபுரிமை மையங்கள் சரியான முறையில் படமாக்கல் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்படவில்லை.

- உள்ளூராட்சி நிறுவனங்களின் வினைத்திறனற்ற சேவைகள்(கழிவகற்றல், பொழுதுபோக்குமையம், சுகாதாரம்).
- மரபுரிமைச்சின்னங்கள் சரியான அடையாளப்படுத்தல் இன்றியும் பராமரிப்பு குறைந்த நிலையிலும் காணப்படுகின்றது.
- மாநகர சபைக்குட்பட்ட மரபுரிமை மையங்கள் பற்றிய சரியான விளம்பரப்படுத்தல்கள் தேசிய மற்றும் சா்வதேச ரீதியில் இடம்பெறாமை.
- பிரதேச மரபுரிமைச் சின்னங்களின் தனித்துவமும் பாரம்பரியமும் மறைக்கப்பட்டு நலிவடைந்து காணப்படுகின்றது.

**3. சந்தர்ப்பங்கள்**

- தேசிய மரபுரிமை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை.
- முதலீட்டாளர்களின் வருகை அதிகரித்துள்ளமை.
- வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகளினதும், தென்னிலங்கைச் சுற்றுலாப் பிரயாணிகளினதும் வருகை அதிகரித்துள்ளமை.
- உட்கட்டுமான அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை.
- யு9 பிரதான வீதியுடன் இணைந்த வீதி புனரமைப்பு.
- தேசிய பௌதிக திட்டமிடல் செயற்திட்டங்கள்.(ஆநபய உவைல ிடயெ -2030 – துயககயெ ஆநவசழ சுநபழைெ).
- ஆசியாவுடனான அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி செயற்திட்டம்.
- தொல்லியல் திணைக்களம், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தித் திட்டங்கள்.

**4. அச்சுறுத்தல்கள்**

- மரபுரிமைச் சின்னங்கள் புனரமைப்புச் செய்யும் போது பழைய மூலப்பொருட்களை பயன்படுத்தாமை.
- யாழ்ப்பாண மாநகரசபைப்பகுதியிலுள்ள மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய சர்வதேச விளம்பரப்படுத்தல்களை இலங்கை தூதரகங்கள் சரியாக மேற்கொள்வதில்லை.
- வெளிப்புறக் கலாசாரம் பிரதேச கலாசாரத்தினை பாதிப்படையச் செய்கின்றமை.
- யாழ்மாநகரசபைப்பகுதியிலுள்ள மரபுரிமைச்சின்னங்களை வெளிநாட்டு நிறுவனங்களிடம் குத்தகைக்கு கையளிக்கப்படல்.
- யாழ்மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடைந்து வருகின்றமை மாநகர வரலாற்று மரபுரிமைச் சின்னங்களுக்கு சவாலாக உள்ளது.

**5. தந்திரோபாய திட்டங்கள்**

- மனிதன் மற்றும் இயற்கையினால் அபாயத்திற்குள்ளாகக் கூடிய மரபுரிமைச் சொத்துக்களை அடையாளப்படுத்துதல்.
- மனிதன் மற்றும் இயற்கையினால் அழிவடையக்கூடிய கலாசார மரபுரிமைகளுக்கு ஏற்படும் அனர்த்தங்களை குறைக்கும் பொருட்டு முகாமைத்துவ முறைமைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.
- கலாசார மரபுரிமைகளின் அனர்த்த மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான கருவிகளையும், முறைமைகளையும் மேற்கொள்ளல். உதாரணமாக ஆவணப்படுத்துதல் மற்றும் வரைபடமாக்கல் முறைமைகளை மேற்கொள்ளல்.
- யுத்தம் மற்றும் கலவரங்கள் போன்ற மனித அனர்த்தங்களினால் சிதைவுநிலைக்குள்ளான கலாசார மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு யுத்தத்திற்கு பின்னரான மீள் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இயற்கையான மற்றும் கலாசார மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு குறித்த மரபுரிமைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகங்களின் இயல்பை கட்டியெழுப்புதலும், விழிப்புணர்வை ஏற்படுத்தலும்.
- மீள்புனரமைப்பு, ஆவணப்படுத்துதல், சிதைவடைதலைத்தடுத்தல், பத்திரப்படுத்துதல், பலப்படுத்துதல், மீள்உற்பத்தி, மீள்கட்டுமானம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மரபுரிமைச் சொத்துக்கள் தொடர்பான ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- வலுவான சட்டதிட்டங்கள் மற்றும் வினைத்திறனான நிறுவனக்கட்டமைப்புக்களை உருவாக்கல்.
- சர்வதேச அமைப்புக்களுடன் இணைதல்.
- சட்டரீதியான தீர்வுகளை அமுல்படுத்தல்.
- அபிவிருத்தி திட்டத்தில் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றிணைத்தல்.

**முடிவுரை**

யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள மரபுரிமை சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான தந்திரோபாயங்கள் எனும் இவ் ஆய்வானது பரிசோதனை சாரா ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட முடிவுகளை நோக்குகின்ற போது மரபுரிமைச் சொத்துக்கள் கணிசமான அளவு ஆய்வுப் பிரதேசத்தில் பரம்பல் பெற்றிருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் பல மரபுரிமை சொத்துக்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் 45மூமான மரபுரிமை சொத்துக்களே தரமானதாக பேணப்பட்டு நல்ல நிலையில் இருப்பதனையும் 25மூமான மரபுரிமை சொத்துக்கள் ஓரளவாக பேணப்பட்டுக்கொண்டு இருப்பதனையும் 30மூ மான மரபுரிமை சொத்துக்கள் பாதுகாக்கப்படாது உரிய முறையில் கவனிக்கப்படாமல் இருப்பதனையும் பகுப்பாய்வினூடாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. மேற்பட்ட தரவுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் மரபுரிமை சொத்துக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களை மதிப்பீடு செய்கின்ற போது பெறப்பட்ட முடிவானது அவை பௌதீகம், அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற காரணிகளாலேயே ஏற்பட்டுள்ளது என்பதனை அவதானிக்க முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1) Rasanayagam, C., (1926), *Ancient Jaffna*, A.S., Everyman's Publishers Ltd, Madras.
2) Rev.Ganapirakasar, (1928), *A Critical History of Jaffna: The Tamil Era*, Achuvely.
3) Ragupathy, p., (1987), "*Early Settlements in Jaffna*", Sundarsan Graphics, T.Nager, Madras – 600017.p
4) Sitrampalam.C.K, (1992), *Kingdam of Jaffna*, University of Jaffna.
5) Indrapala.K. (1971), *The Origins of the Jaffna Kingdom*, National printers, Kandy.
6) Pushparadnam, P., (2014), *Tourism and Monuments of Archaeological Heritage in Northern Sri Lanka*, Express Newspapers (Ceylon) (Pvt) Ltd.
7) *Henry Cleere., (2000), Archaeological Heritage Management in the Modern Word, USA and Canada by Routledge, 270 Madison Ave, New York NY 10016.*
8) *Derek Linstrum, (1976), The Conservation of Historic Towns and Monuments, Commonwealth Foundtion, London.*
9) Prematilleke, P.L. (Ed), (1993), *Archaeological Heritage Management ICOMOS*, CCF, Sri Lanka.
10) Nelson, A.William, (1984), *Dutch Forts of Sri Lanka*, Littlehampton Book Services Ltd; illustrated Edition.

**Websites**

1. **www.wikipidia.org**
2. **http://Who.Unesco.org/en/Conventiontex**
3. **http://Unesdoc,Unesco.org/images/0013/001329/132988.pdf**